OPEN ACCESS

Volume: 5

Issue: 1

Month: July

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 20.05.2020

Accepted: 20.06.2020

Published: 01.07.2020

Citation:
Mohanraj, T. (2020). Tolkappiyar's Solutions for Polysemy and Homonymy Semantic Ambiguity: A Structural Linguistics Explanation. *Shanlax International Journal of Tamil Research*, 5(1), 134–138.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i1.3258

*Corresponding Author:
mohr_d12@yahoo.co.in

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Tolkappiyar's Solutions for Polysemy and Homonymy Semantic Ambiguity: A Structural Linguistics Explanation

**T. Mohanraj**
*Research Scholar, Department of Literature*
*Tamil University, Thanjavur, Tamil Nadu, India*

**Abstract -** Structural Linguistics explains that the words of any language have paradigmatic and syntagmatic relations between them. Tolkappiyar seems to have known about this relationship in his time. This article establishes that Tolkappiyar utilized this knowledge of two types of relations between words in providing solutions to the semantic ambiguity of Polysemy and Homonymy words in Tamil..

**Key Words:** Tamil Grammer, Tolkappiyam, Disambigutiy, Structural Linguistics, Paradigmatic Relatioan, Syntagmatic Relation.

**References**

1. Rajaram S, 'Noam Chomsky', Kalachuvadu Pathippagam, Nagercoil, 2019
2. Sivalinganar A (Ed.), 'Tolkappiyam Sollathikaram(Urai Valam)-Kilaviyakkam', International Institute for Tamil Studies, Chennai, 1982, P.4.
3. Adigalaasiriyar (Ed.), 'Tolkappiyam Sollathikaram Ilampooranar Urai', Tamil University, Thanjavur, 1988, P. 60.

# தொல்காப்பியரின் பலபொருள் ஒருசொல் பொருண்மைச் சிக்கல் தீர்வுகள்: அமைப்பு மொழியியல் விளக்கம்

*தி. மோகன்ராஜ்*
முனைவர் பட்ட ஆய்வாளர், இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

***ஆய்வுச்சுருக்கம்:*** *அமைப்பு மொழியியல் சொற்களுக்கு இடையில் அடுக்குநிலை மற்றும் தொடர்நிலை உறவு அமைந்திருக்கும் என்று விளக்குகிறது. இந்த உறவுநிலைகளைப் பற்றித் தொல்காப்பியர் தம் காலத்திலேயே விரிவாக அறிந்துவைத்துள்ளார். அதனால், மொழியில் பலபொருள் ஒருசொற்கள் ஏற்படுத்தும் பொருண்மைச் சிக்கலைக் களைவதற்கு இம்மொழியறிவைக் கொண்டே அவர் தீர்வு கண்டிருக்கிறார் என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழ் இலக்கணம், தொல்காப்பியம், மொழித்தீர்வு, அமைப்பு மொழியியல், அடுக்குநிலை, தொடர்நிலை, பலபொருள் ஒருசொல்*

**கிளவியாக்கமும் மொழிச்சிக்கல் தீர்வுகளும்**

தொல்காப்பியர் சொல்லதிகாரக் கிளவியாக்கத்தில் மொழிப் பயன்பாட்டில் ஏற்படும் பலவிதமான சிக்கல்களுக்குத் தீர்வுகளை வழங்கியுள்ளார். இவற்றை உரையாசிரியர்கள் வழுவமைதி என்று விளக்குகின்றனர். பேடி என்னும் சொல் ஏற்கும் பால் ஈறு, பால் மயக்குற்ற ஐயக்கிளவி ஏற்கும் விகுதி, தன்மைச் சொல்லையும் அஃறிணைச் சொல்லையும் இணைத்து வாக்கியத்தை உருவாக்கும்போது அது ஏற்கும் பயனிலை வடிவம், எண்ணுத்தினை விரவுப் பெயர்கள் செய்யுளில் ஏற்கும் வினைவடிவம் என்று பல வகையான மொழிப் பயன்பாட்டுச் சிக்கல்களைக் கண்டறிந்து அவற்றுக்கான தீர்வுகளை முன்வைத்திருக்கிறார். மொழி, நெகிழ்வுத்தன்மை உடையது. அதன் எல்லாக் கூறுகளையும் ஒரு குறிப்பிட்ட பயன்பாட்டு எல்லைக்குள் குறுக்கிவிட முடியாது. இந்த நுட்பமான மொழியறிவைக் கொண்டிருந்தமையால் தொல்காப்பியர். இந்தச் சிக்கல்களுக்கான தீர்வுகளைக் கண்டறிந்துள்ளார் என்பது மட்டுமல்லாமல் தொல்காப்பியத்தை விதிமுறை இலக்கணமாக அல்லாமல் விளக்கமுறை இலக்கணமாகவும் உருவாக்கியுள்ளார். இந்த வரிசையில், பலபொருள் ஒரு சொல் ஏற்படுத்தும் பொருண்மைச் சிக்கலுக்கான தீர்வினையும் அவர் முன்வைத்துள்ளார். ஒரு சொல் மற்றொரு சொல்லுடன் அடுக்குநிலை மற்றும் தொடர்நிலை உறவில் இருக்கும் என்று இக்கால அமைப்பு மொழியியல் குறிப்பிடுகிறது. சொற்களுக்கு இடையிலான இந்த உறவினை அறிந்துவைத்திருந்த நிலையிலேயே தொல்காப்பியர் பல பொருள் ஒரு சொற்களின் பொருண்மைச் சிக்கல் தீர்வுகளை வழங்கியுள்ளார் என்று இக்கட்டுரை விளக்குகிறது.

**அமைப்பு மொழியியலில் இணையெதிர்மைகள்**

பெர்டினான்ட் டி சசூர் தோற்றுவித்த அமைப்பு மொழியியலில் பல்வேறு இணையெதிர்மைகள் (Dichotomies) குறிப்பிடப்படுகின்றன. மொழிக் கருத்தீடு (Langue) - பேச்சு (Parole) என்பது ஒருவகையான இணையெதிர்மை ஆகும். மொழியை ஆராய்வதில் வரலாற்றுக்கால அணுகுமுறை (Diachronic Approach), சமகால அணுகுமுறை (Synchronic

Approach) என்பது வேறொரு வகையான இணையெதிர்மை ஆகும்[1]. அதேபோன்று, அடுக்குநிலைஉறவு(Paradigmatic Relation), தொடர்நிலை உறவு (Syntagmatic Relation) என்பதுமற்றொருவகையானஇணையெதிர்மை ஆகும். இதன்படி, ஒரு சொல் மற்றொரு சொல்லுடன் அடுக்குநிலை மற்றும் தொடர்நிலை என்னும்இரண்டுவகையானஉறவுநிலைகளைக் கொண்டிருக்கும் என்று விளக்கப்படுகிறது.

### அடுக்குநிலை உறவு

அடுக்குநிலை உறவு என்பது ஒரு சொல் தன்னோடு சேர்ந்த தனக்கு இனமான சொற்களுடன் கொண்டிருக்கும் உறவாகும். சான்றாக, கை என்னும் ஒரு சொல், கால், முகம், செவி, கண், மூக்கு என்று உடலுறுப்புகள் என்னும் நிலையில் தனக்கு இனமான செ ாற்களுடன் அடுக்குநிலை உறவில் உள்ளது. எனவேதான், "கை வலித்தது" என்னும் வாக்கியத்தில் கை என்னும் சொல்லுக்குப் பதிலாகக் கால் என்னும் சொல்லை நம்மால் பதிலீடு செய்து, "கால் வலித்தது" என்னும் வாக்கியத்தை உருவாக்கமுடிகிறது. மல்லிகை என்னும் ஒரு சொல், முல்லை, குறிஞ்சி, வேங்கை, கொன்றை என்று மலர்கள் என்னும் நிலையில் பிற சொற்களுடன் அடுக்குநிலை உறவில் உள்ளது. இங்கும், மல்லிகை மலர்ந்தது என்னும் வாக்கியத்தை முல்லை மலர்ந்தது என்றும் பதிலீடு செய்யலாம். எந்தச் சொல்லை எடுத்துக்கொண்டாலும் அது வேறொரு சொல்லுடன் அடுக்குநிலை உறவில் இருக்கும் என்பது அமைப்பு மொழியியல் தரும் விளக்கமாகும்.

### தொடர்நிலை உறவு

தொடர்நிலை உறவு என்பது ஒரு சொல், தான் இடம்பெற்றிருக்கும் வாக்கியத்தில் அல்லது தொடரில் தனக்கு முன்னும் பின்னுமாகத் தொடர்ந்துவரும் பிற வகைச் சொற்களுடன் கொண்டிருக்கும் தொடரியல் உறவாகும். ஒருசொல்தன்னுடன்இணைந்துவரும் வேறொரு சொல்லுடன் தொடரியல் நிலையில் உறவு கொண்டிருக்கும்போது தான் பொருள் தரும் தொடர் அல்லது வாக்கியம் உருவாகும்.

"பூ மலர்ந்தது" என்னும் வாக்கியத்தில் பூ என்னும் சொல் மலர்ந்தது என்னும் சொல்லுடன் தொடர்நிலை உறவு கொண்டிருத்தலால்தான் பொருளுடைய வாக்கியமாக அது அமைந்துள்ளது.

"பூ முட்டையிட்டது" என்னும் வாக்கியத்தில் பூ என்னும் சொல் முட்டையிட்டது என்னும் சொல்லுடன் தொடரியல் உறவு கொண்டிருக்கவில்லை ஆதலால் அது பொருளுடையவாக்கியமாகஅமையவில்லை. இந்தத் தொடரியல் உறவினைப் பற்றிச் சேனாவரையர் கிளவியாக்கத்தின் முதல் நூற்பாவிற்கான உரையில் விளக்கியுள்ளார்.

"தொடர்மொழியாவது அவாய் நிலையானும் தகுதியானும் அண்மைநிலையானும் இயைந்து பொருள் விளக்கும் தனிமொழியீட்டம்"[2] என்பது அவர்தம் உரையாகும். இவர் குறிப்பிடும் தொடர்மொழி என்பது தொடர் அல்லது வாக்கியமாகும். அது அவாய் நிலையானும் தகுதியானும் அண்மை நிலையானும் இயைந்துவரும் சொற்களின் தொகுதி என்று கூறுகிறார். இவ்வுரைக்குக் குறிப்புரை அளித் திருக்கும் ஆ.சிவலிங்கனார் அவாய்நிலை, தகுதி, அண்மைநிலை பற்றிக் கீழ்வருமாறு விளக்குகிறார்.[3]

அவாய் நிலை - ஒரு சொல் ஒரு சொல்லை இன்றியமையாது எதிர்பார்த்து (விரும்பி) நிற்கும் நிலை. காற்று வீசும்... காற்று என்பது வீசும் என்பதை அவாவித் தொடர்ந்தது.

தகுதி - இயைபான பொருத்தம்... நெருப்பால் சுடு என்ற தொடர் அமைவது தகுதியால் அமைவதாம்.

அண்மைநிலை - சொற்களைத் தொடர்ந்து கூறுங்கால் கால இடையீடு இல்லாமல் நெருக்கமாகக் கூறுதல்.

சேனாவரையர் தரும் இவ்விளக்கம் அமைப்பு மொழியியலார் குறிப்பிடும் தொடர்நிலை உறவுடன் பொருந்துகிறது. இந்த அமைப்பு விளக்கப் பின்னணியில் தொல்காப்பியர் பல பொருள் ஒரு சொல்லின் பொருண்மைச் சிக்கலுக்கு வழங்கியிருக்கும் தீர்வுகளை ஆராயலாம்.

### தொல்காப்பியம் சுட்டும் பலபொருள் ஒரு சொல்

பலபொருள் ஒரு சொற்கள் எல்லா மொழிகளிலும் உள்ளன. தமிழில் மா என்னும் சொல், மாமரம், குதிரை, வண்டு, திருமகள் என்று பல பொருள்களைத் தரும். இவ்வாறான பலபொருள் ஒருசொற்கள் பயன்பாட்டுச் சூழலில் பொருள் மயக்கத்தை ஏற்படுத்தும் இயல்பின. இவை தொடரில் இடம்பெறும் நிலையில் இவை தாங்கி நிற்கும் பொருள்களில் எப்பொருளை ஏற்று வந்துள்ளன என்பதை அறிவதற்கான வழிமுறைகளை முன்வைப்பது மொழிச் சிக்கல்களுக்குத் தீர்வுகாண விழையும் இலக்கணியின் கடமையாகும். அதன்படி, தொல்காப்பியர் இதற்கான தீர்வுகளைக் கிளவியாக்கத்தில் முன்வைக்கிறார்.

தொல்காப்பியர் பலபொருள் ஒரு சொல் இரண்டு வகைப்படும் என்று குறிப்பிடுகிறார். அவற்றை வினை வேறுபடும் பலபொருள் ஒருசொல் என்றும் வினைவேறுபடாப் பலபொருள் ஒரு சொல் என்றும் பகுக்கிறார். வினை வேறுபடும் பலபொருள் ஒரு சொற்கள் தொடரில் இடம்பெறும்போது அவை அத்தொடரில் எந்தப் பொருளில் இடம் பெற்றுள்ளன என்பதைக் கண்டறிவதற்கான தீர்வுகளாக மூன்று வழிமுறைகளைக் குறிப்பிட்டுள்ளார். அவை முறையே, வேறுபடு வினை, இனம், சார்பு என்பனவாகும்.

**வினைவேறு படூஉம் பலபொருள் ஒருசொல்**
**வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினும்**
**தேறத் தோன்றும் பொருள்தெரி நிலையே**
**(தொல்.சொல்.53)**

என்னும் நூற்பாவில் அவர் குறிப்படும் வேறுபடு வினை என்பது அமைப்பு மொழியியலில் விளக்கப்படும் தொடர்நிலை உறவுடனும் இனம் என்பது அடுக்குநிலை உறவுடனும் தொடர்புடையது. தொல்காப்பியர் மூன்றாவதாகக் குறிப்பிடும் சார்பு என்பது சூழல் சார்ந்தது என்பதால் அதுபற்றி இக்கட்டுரை கவனத்திற் கொள்ளவில்லை.

### வேறுபடு வினை

ஒரு தொடரில் பலபொருள் ஒரு சொல்லுடன் தொடர்ந்துவரும் வினைச்சொல்லின் துணைக் கொண்டு அச்சொல் எப்பொருளை ஏற்று வந்துள்ளது என்பதை அறியலாம் என்று தொல்காப்பியர் தீர்வு காண்கிறார். சொற்கள் தம்மைத் தொடர்ந்துவரும் சொற்களுடன் தொடர்நிலை உறவினைக் (Syntagmatic Relation) கொண்டிருக்கும் என்று அறிந்திருந்த நிலையிலேயே இதனை ஒரு தீர்வாகத் தொல்காப்பியர் முன்வைத்திருக்கிறார். இப்பகுதிக்கு எழுதப்பட்ட இளம்பூரணரின் உரை பின்வருமாறு அமைந்துள்ளது.

*மா தளிர்த்தது; பூத்தது; காய்த்தது என வரும். இவ்வினை மரமாவிற் கல்லது ஏலாது”*[4]

மா என்னும் பலபொருள் ஒரு சொல் மாமரத்தைக் குறித்தே வந்துள்ளது என்பதைத் தளிர்த்தது, பூத்தது, காய்த்தது என்னும் வினைகள் உணர்த்துகின்றன என்பது இளம்பூரணரின் விளக்கமாகும். எனவே, இது தொல்காப்பியரால் சொற்களுக்கு இடையில் அமைந்திருக்கும் தொடர்நிலை உறவின் துணைக்கொண்டு காணப்பட்ட மொழித் தீர்வாகும்.

### இனம்

தொடரில் பலபொருள் ஒரு சொல் ஏற்றுவரும் குறிப்பிட்ட ஒரு பொருளை

அறிவதற்கு அச்சொல்லுடன் இணைந்து வரும் அதன் இனச்சொல்லும் துணைபுரியும் என்பது தொல்காப்பியரின் மற்றொரு தீர்வாகும். இத்தீர்வினை இனம் என்று குறிக்கிறார். சொற்கள் தங்கள் இனச் சொற்களுடன் கொண்டிருக்கும் அடுக்குநிலை உறவை (Paradigmatic Relation) அறிந்திருந்த நிலையிலேயே அவர் இதனை ஒரு தீர்வாக முன்வைத்திருக்கிறார். இப்பகு திக்கு இளம்பூரணர் பின்வருமாறு உரை எழுதியுள்ளார்.

"மாவும் மருதும் ஓங்கின என்பது இனத்தான் மாமரம் என்பது விளங்கும். மாவும் மரையும் புலம்பெயர்ந்தன வென்றால் விலங்குமா என்பது அறியப்படும்."[5]

மாவும் மருதும் ஓங்கின என்னும் வாக்கியத்தில் மருது என்னும் மரப்பெயர் இடம்பெற்றிருக்கின்றமையின் மா என்பது அதன் இனமான மாமரம் என்று பொருள் கொள்வதற்கு ஏதுவாகியுள்ளது. மாவும் மரையும் புலம்பெயர்ந்தன என்னும் வாக்கியத்தில் மரை (மான்) என்னும் விலங்கின் பெயர் வந்துள்ளமையின் மா என்பது அதன் இனமான குதிரை என்று பொருள் கொள்வதற்கு ஏதுவாகியுள்ளது. இது தொல்காப்பியரால் சொற்களுக்கு இடையில் அமைந்திருக்கும் அடுக்குநிலை உறவின் துணைக்கொண்டு காணப்பட்ட மொழித் தீர்வாகும். பலபொருள் ஒரு சொற்களுக்கான இவ்விரு தீர்வுகளையும் அமைப்பு மொழியியல் குறிப்பிடும் இணையெதிர்மையுடன் கீழ்வருமாறு தொடர்புபடுத்தலாம்.

| வ.எண் | தொல்காப்பியரின் மொழித் தீர்வு | அமைப்பு மொழியியலின் இணையெதிர்மை | சான்று |
|---|---|---|---|
| 1 | வேறுபடு | வினை தொடர்நிலை உறவு (Syntagmatic Relation) | மா தளிர்த்தது |
| 2 | இனம் | அடுக்குநிலை உறவு (Paradigmatic Relation) | மாவும் மருதும் ஓங்கின |

அட்டவணை : வினை வேறுபடும் பலபொருள் ஒரு சொல் - தொல்காப்பியரின் தீர்வுகள்

## முடிவுரை

சொற்கள் பிற சொற்களுடன் அடுக்குநிலை மற்றும் தொடர்நிலை உறவினைக் கொண்டிருக்கின்றன என்று இக்கால அமைப்பு மொழியியல் விளக்குகிறது. தொல்காப்பியர் சொற்களுக்கு இடையில் அமைந்திருக்கும் இந்த அடுக்குநிலை மற்றும் தொடர்நிலை உறவுகளைப் பற்றித் தம் காலத்திலேயே விரிவாக அறிந்திருக்கிறார். பல பொருள் ஒரு சொற்கள் தொடரில் இடம்பெறும்போது அவற்றின் பொருள் மயக்கத்தைக் களைவதற்கு அவருக்கு இந்த மொழியறிவே துணைபுரிந்துள்ளது.

## சான்றெண் விளக்கம்

1. இராசாராம் சு., நோம் சொம்ஸ்கி, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்: 2019, ப.100
2. சிவலிங்கனார் ஆ(ப)., தொல்காப்பியம் - சொல்லதிகாரம் (உரைவளம்) கிளவியாக்கம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை: 1982, ப.4.
3. அடிகளாசிரியர் (ப), தொல்காப்பியம் சொல்லதிகாரம் இளம்பூரணர் உரை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்: 1988, ப.60.